## உலகை வெல்லும் வேட்கையுடன் விரைந்து பயணிக்கும் தமிழ்நாட்டு மக்கள் தேர்ந்தெடுத்த

# திராவிட நாயகர் ‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்’ எனும் மகத்தான தலைவரின் கரங்களை பாதுகாப்பாகப் பற்றிக் கொண்டு ஒன்றாகப் பயணித்து வென்றிடுவோம்!

## சட்டப்பேரவையில் – இடைக்கால நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலளித்து – நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு உரை!

**சென்னை, பிப்.22-**

**“உலகை வெல்லும் வேட்கையுடன் விரைந்து பயணிக்கும் தமிழ்நாட்டு மக்கள் தேர்ந்தெடுத்த திராவிட நாயகர் “முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்” எனும் மகத்தான தலைவரின் கரங்களைப் பாதுகாப்பாகப் பற்றிக் கொண்டு நாம் ஒன்றாகப் பயணித்து வென்றிடுவோம்!”, என்று, நேற்று முன்தினம் சட்டப்பேரவையில் இடைக்கால நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்திற்குப் பதில் அளித்து உரையாற்றுகையில் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு உணர்ச்சி மேலிடக் குறிப்பிட்டார்.**

**இடைக்கால வரவு-செலவுத் திட்ட பொது விவாதத்திற்கு நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு அளித்த பதிலுரை வருமாறு:**

*2026-2027 ஆம் ஆண்டிற்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையின்மீதான விவாதத்திற்கு இம்மாமன்றத்தில் பதிலளிக்கவும், மூன்று முறை இம்மன்றத்தில் நிதிநிலை அறிக்கையினைத் தாக்கல் செய்யவும் அரியதொரு வாய்ப்பினை எனக்கு வழங்கியுள்ள முதலமைச்சர், (மேசையைத் தட்டும் ஒலி) ‘தாயொக்கும் அன்பின் தவமொக்கும் நலம் பயப்பின்’ எனும் கம்பனின் வரிகளுக்கொப்ப, தாயாய் நின்று தமிழ்நாட்டைக் காக்கும் தனிப்பெருமை கழகத் தலைவர், அண்ணன் முதலமைச்சர் அவர்களுக்கு முதற்கண் என் வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*முத்தமிழறிஞர் கலைஞர் உறங்கும் திசை நோக்கி தொழுது வணங்குகிறேன். நம்முடைய தலைவர் அவர்களுடைய தோளோடு தோள் நின்று, தனயனாய் மட்டுமல்லாமல், தள கர்த்தராகவும் நின்று இளைஞர் படையினை வழிநடத்தும் துணை முதலமைச்சர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) இம்மாமன்றத்தில் எங்களுக்கெல்லாம் அறிவுரை வழங்கி, நெறிப்படுத்தும் அவைத் தலைவரான தங்களுக்கும், அமைச்சர் பெருமக்கள், முன்வரிசைத் தலைவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

### திருச்சுழி வாக்காளப் பெருமக்களுக்கு நன்றி!

*இடைக்கால நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு, நல்ல கருத்துகளை வழங்கிய எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட உறுப்பினர் பெருமக்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மாமன்றத்திற்கு தொடர்ச்சியாக என்னைத் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கக்கூடிய திருச்சுழி சட்டமன்றத் தொகுதியின் என்னுடைய பெருமதிப்பிற்குரிய வாக்காளப் பெருமக்களுக்கும் இந்த நேரத்தில் என்னுடைய மனமார்ந்த நன்றியினை நான் வணங்கித் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.*

*2026-2027 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தின்மீது நடைபெற்ற விவாதத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களை இம்மாமன்றத்தில் பதிவு செய்திருக்கிறார்கள்.*

*சட்டமன்ற உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துகளுக்கு, அவ்வப்போது அமைச்சர் பெருமக்கள் மட்டுமின்றி, நிதித்துறை பொறுப்பினை வகிக்கும் நானும் உரிய விளக்கங்களை இந்த மன்றத்தில் அளித்துள்ளேன். எனவே, முதலமைச்சர் அவர்கள் தலைமையில் ஐந்தாண்டுக்கால திராவிட மாடல் ஆட்சியை இந்த நாட்டு மக்களும், எதிர்காலத் தலைமுறையும், எவ்வாறு சீர்தூக்கிப் பார்த்து எடைபோடுவார்கள் என்பது குறித்து சில கருத்துகளை என்னுடைய பதிலுரையாக உங்கள் முன்னால் வைக்க விழைகிறேன்.*

*“எரிகின்ற எங்களின் நெஞ்சமேல் ஆணை*
*இனி எங்கள் ஆட்சி இந் நாட்டில்” (மேசையைத் தட்டும் ஒலி)*

*என நெஞ்சுறுதியுடன் பாடிய புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் வைர வரிகளுக்கு உயிர் தரும் ஆட்சி இந்த ஆட்சி.*

### மதவாத அரசியலை தடுத்து நிறுத்தியவர் பெரியார்!

*சமூக நீதி. தந்தை பெரியார் வழியில் வந்த இந்த திராவிட மாடல் அரசு, சமூக நீதியை நிலை நாட்டிட தொடர்ந்து பாடுபட்டு வருகிறது. தமிழ் நாட்டை கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக சமூக நீதிப் பாதையில் நடைபயின்றிட வழிநடத்தி, அதன்மூலம் மதவாத அரசியலை தடுத்து நிறுத்திய பெருமை தந்தை பெரியார் அவர்களையே சாரும். தமிழ்நாட்டின் எல்லையில் தந்தை பெரியார் இன்னமும் காவல் காத்து வருகிறார் என்ற ஒரு செய்திதான் வடக்கிலிருந்து வீசும் புழுதிக் காற்றை தடுத்து நிறுத்துகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)*

*தமிழ்நாடு ஒரு நூற்றாண்டிற்கு மேலாக ஏன் தனித்துவமாக, சாதி, மத பாகுபாடுகளுக்கு இடம் கொடுக்காமல் அமைதிப் பூங்காவாகத் திகழ்கிறது என்று யோசித்துப் பார்த்தால், அதெற்கெல்லாம் ஒரே காரணம் சமூக நீதி அடிப்படையிலான திராவிட மாடல் அரசின் கொள்கைகள்தான்.*

*தந்தை பெரியார் போன்றே தாமாக சிந்தித்து, சிறந்த கருத்துக்களை தெரிவிக்கும் மாபெரும் சிந்தனையாளர்கள் நம்மிடையே தோன்றியது தமிழ்நாட்டிற்குக் கிடைத்த ஓர் அரிய நல்வாய்ப்பாகும். தந்தை பெரியாரின் சிந்தனைகளை பண்டிதருக்கும், பாமரருக்கும் ஏற்றவகையில் சமூக நீதி உரையாடலாக நிகழ்த்திக் காட்டியவர் பேரறிஞர் அண்ணா. தந்தை பெரியாரின் சிந்தனைகளுக்கு செயல் வடிவம் கொடுத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். இந்த முப்பெரும் தலைவர்களின் வழி வந்து, தமிழ்நாட்டின் வெற்றியைத் தக்க வைத்துக்கொள்ள, முன் எப்போதும் இல்லாத அளவிற்கு சவால்களையும், நெருக்கடிகளையும் இந்தக் காலக்கட்டத்தில் எதிர்கொண்டு தமிழ்நாட்டின் சமூக நீதிப் பயணத்தைத் தொடர்ந்து நிகழ்த்தி வருபவர் நமது முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

### தந்தையின் முயற்சியை தனயன் நிறைவேற்றினார்!

*பெரியாரின் சிந்தனை, அண்ணாவின் சொல், கலைஞரின் செயல், முதல்வரின் உழைப்பு என்ற இந்த நான்கு தலைவர்களின் தனிப்பெரும் தன்மையால்தான் தமிழ்நாட்டு மக்கள் நாள்தோறும் நிம்மதியாக உறங்கச் செல்கிறார்கள். சமூகத்தின் அனைத்து நிலைகளிலும் சமூக நீதியை நிலைநாட்ட வேண்டுமென்ற நோக்கோடு, தனது தள்ளாத வயதிலும் உழைத்திட்ட தந்தை பெரியாரின் நெஞ்சில் தைத்த முள் ஒன்றை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எடுத்திட முயன்றார். அது அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற திட்டம். எனினும், அத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு பல தடைகள், சோதனைகள் வந்தன. அவற்றையெல்லாம் கடந்து இந்த அரசு பதவி ஏற்ற 100-வது நாளிலேயே அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற திட்டத்தின்கீழ் (மேசையைத் தட்டும் ஒலி) முறையாகப் பயிற்சி பெற்ற 29 அர்ச்சகர் பள்ளி மாணவர்கள் தமிழ்நாட்டின் பல்வேறு திருக்கோவில்களிலும் பணியமர்த்தப்பட்ட வரலாற்று நிகழ்வு நடைபெற்றது. அதுமட்டுமல்ல, அன்றைய தினம் பணி நியமனம் பெற்ற பெண் ஓதுவார் ஒருவர் சென்னை அருகிலுள்ள மாடம்பாக்கம் தேனுபுரீஸ்வரர் திருக்கோவிலில் அடுத்த நாள் காலைப் பொழுதில் தேமதுரத் தமிழோசையுடன் மனம் உருகிப் பாடிய தேவாரப் பாடல்கள் உலகெங்கும் எதிரொலித்தன. தந்தை பெரியார் நெஞ்சில் தைத்த முள்ளை அகற்ற முயன்ற தந்தையின் முயற்சியை தனயன் வெற்றிகரமாக முடித்து வைத்தார். (மேசையைத் தட்டும் ஒலி)*

*சமூக ஏற்றத்தாழ்வுகளை அகற்றிடும் நோக்கில் முன்வைக்கப்படும் சமூக நீதி கருத்துக்களின் புதிய பரிமாணங்களை வகுத்திடும் நோக்கில் பெண்கள், பழங்குடியினர், திருநங்கைகள், மாற்றுத்திறனாளிகள் என்ற அனைவருக்கும் உரிய பங்கினை இந்த அரசு தொடர்ந்து வழங்கி வந்திருக்கிறது. சமூக ஏற்றத்தாழ்வும், ஏழ்மையும் ஒன்றிணைந்தால் ஏற்படும் விளைவுகள் எப்படிப்பட்டது என்பதை அறிந்து அரசுப் பள்ளி மாணவர்களுக்கான சிறப்பு நலத் திட்டங்கள், வடசென்னை வளர்ச்சித் திட்டம், கலைஞர் கைவினைத் திட்டம் என்ற பல புதிய திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வந்து கொண்டிருக்கிறது நமது அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) ஒரே வரியில் சொல்ல வேண்டுமென்றால், “சமூக நீதி காக்க நமது அரசு என்றென்றும் தொடர்ந்து போராடும்”.*

**நாங்கள் மகளிர் உரிமைத்தொகை ஆயிரம் ரூபாய் கொடுப்பதை நீங்கள் தடுக்க முயற்சித்தால், நான் ஐந்து ஆயிரம் ரூபாய் தருவேன் என்ற முதலமைச்சரின் முடிவால், இன்று மகளிர் மனம் குளிர்ந்து வாயார வாழ்த்தும் சூழல் ஏற்பட்டுள்ளது**



### கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் நாட்டிற்கே முன்னோடி திட்டம்!

*மகளிர் நலன். முதலமைச்சர் அவர்கள் பதவியேற்ற அன்றே முதல் கையெழுத்திட்ட கோப்புகளில் ஒன்று மகளிருக்கான கட்டணமில்லா பேருந்து வசதியை கொடுக்கும் மகளிர் விடியல் பயணத் திட்டம். பெண்கள் தங்களுடைய பிறந்த வீட்டிற்கு செல்வதற்குக்கூட கணவன்மார்களின் அனுமதியை எதிர்நோக்கி இருந்த காலம் மாறி, பெண்களுக்கான பொருளாதார சுதந்திரத்தை அளிக்கும் வகையில் அவர்களின் சிறகுகள் விரிந்து சுதந்திரப் பறவைகளாக பயணம் செய்திடும் வாய்ப்பை வழங்கியவர் நமது முதலமைச்சர் அவர்கள். அதனால்தான் இன்றும், கிராமப் பகுதிகளில் விடியல் பயணம் மேற்கொள்ளும் பெண்கள் பெருமையோடு குறிப்பிட்டு சொல்கிறார்கள். “நாங்கள் பயணம் செய்வது ஸ்டாலின் பஸ்ஸில்” என்று. (மேசையைத் தட்டும் ஒலி) நாட்டிற்கே வழிகாட்டியாக ஒரு கோடியே 31 இலட்சம் பெண்களுக்கு அவர்களின் உழைப்பை அங்கீகரிக்கும் வகையில் மாதாமாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் நாட்டிற்கே முன்னோடியாக விளங்குகிறது.*

*பெண் குழந்தைகள் உயர் கல்வியைத் தொடர வேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்துடன் அறிமுகப்படுத்தப்பட்ட புதுமைப் பெண் திட்டம். பெண்கள் என்றாலே காலா காலத்தில் திருமணம் செய்து வைக்கப்பட வேண்டியவர்கள் என்ற நிலைமாறி, அவர்களின் திருமணத்திற்கு வாங்கவேண்டிய தங்கத்தின் விலை குறித்து பெற்றோர்கள் கவலைப்படும் நிலை மறைந்து, பெண் குழந்தைகள் கல்வி பயில வேண்டும், அதுவும் உயர் கல்வியைத் தவறாது பெற வேண்டும், மிகச்சிறந்த பணி வாய்ப்புகளை அவர்கள் பெற்றால் அவர்களைத் திருமணம் செய்துகொள்ள ஆண்கள் வரிசையில் வந்து நிற்பார்கள் என்ற நிலை இன்றைக்கு உருவாகியிருக்கிறது. அந்தவகையில், முதலமைச்சர் அவர்களின் முன்னெடுப்பில் பழமைவாத கருத்துக்களை மாற்றி, மகளிர் நலன் காக்க விரிவான திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன. கடைக்கோடி கிராமங்களிலிருந்து பணி நிமித்தம் காரணமாக நகரங்களை நோக்கிவரும் பெண்களின் பாதுகாப்புக்காக தங்கும் வசதி கொண்ட தோழி விடுதிகள் மாவட்டந்தோறும் அமைக்கப்பட்டு வருகின்றன.*

### தமிழ்நாட்டு மகளிரின் அன்புச் சகோதரரின் ஆட்சி!

*மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் அளிப்பதில் நாட்டிலேயே முதன்மை மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்ந்து கொண்டிருக்கிறது. பெண்களுக்கு சொத்துரிமை வழங்கிய முத்தமிழறிஞர் கலைஞர் வழியில், பத்திரப் பதிவில் சலுகைக் கட்டணத் திட்டத்தை அண்மையில் முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். பெண்களுக்கு கருப்பை வாய் புற்றுநோய் தடுப்பூசி போடும் திட்டத்தை நாட்டிலேயே முதன்முறையாக நமது அரசுதான் அறிமுகப்படுத்தியது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவேதான், முதலமைச்சர் அவர்கள் அடிக்கடி சொல்வதுபோல, தமிழ்நாட்டு மகளிரின் அன்புச் சகோதரனின் ஆட்சி இந்த ஆட்சி என்பதை நாம் பெருமையோடு சொல்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)*

*பள்ளிக் குழந்தைகள் பசித்த வயிற்றுடன் பாடம் படிக்க வரும் நிலையினை மாற்றி பசியின்றி உற்சாகத்துடன் கல்வி பயின்றிட அறிமுகப்படுத்தப்பட்ட திட்டம்தான் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்.*

*“பசிப்பிணி மருத்துவன் இல்லம்:*
*அணித்தோ? சேய்த்தோ? கூறுமின், எமக்கே”*

*என்ற சங்க இலக்கிய கருத்தினை மனதில் ஏற்று நாட்டிலேயே முதன்முறையாக அறிமுகப்படுத்தப்பட்ட இந்தத் திட்டம் அனைவரின் பாராட்டுதல்களையும் பெற்றது. பெற்றோரை இழந்த குழந்தைகளை அரவணைத்துப் பாதுகாத்திடும் வகையில் “அன்புக் கரங்கள்” திட்டம், பிறந்து ஆறு மாதம் வரை உள்ள குழந்தைகளின் “ஊட்டச்சத்தை உறுதிசெய்” திட்டம், இது தாயுமானவரின் ஆட்சி என்பதை உறுதி செய்யக்கூடிய திட்டங்களாக இது மலர்ந்திருக்கிறது.*

### கல்வி!

*அரசுப் பள்ளி மாணவர்களை சாதனையாளர்களாக உருவாக்கி, உலகெங்கும் உள்ள புகழ்பெற்ற கல்வி நிறுவனங்களில் உயர் கல்வி பயின்றிட மாநிலமெங்கும் மாதிரிப் பள்ளிகள், புதுமைப் பெண் திட்டத்தைத் தொடர்ந்து, ஆடவரும் பயன்பெறும்வகையில் தமிழ்ப் புதல்வன் திட்டம், கல்லூரிக் கல்வியில் திறன் மேம்பாட்டையும் இணைத்து சாதனை புரிந்த நான் முதல்வன் திட்டம் என நாம் அடுக்கிக்கொண்டே போகலாம். மாணவர்களை மனதார நேசித்திடும் நம் முதல்வர் அவர்கள் பள்ளி, கல்லூரி மாணவர்களை அடிக்கடி பார்த்து சொல்லிடும் வாசகம் ஒன்றே ஒன்றுதான், “எப்படியாவது படித்துவிடு, எதிர்காலம் உன் கையில்”. (மேசையைத் தட்டும் ஒலி) எனவேதான் மாணவர் நலன் காக்க மாணவ மணிகளுக்கான திட்டங்கள் பலவற்றை உருவாக்கிய இந்த ஆட்சி, “உலகை வெல்லும் இளைய தமிழகத்தை உருவாக்க முயன்றிடும் நல்லாட்சி”, இந்த ஆட்சி.*

### கடைக்கோடித் தமிழர் நலன்!

*தமிழ்ச் சமூகத்தின் விளிம்பு நிலையில் வாழும் அனைத்துத் தரப்பு மக்களையும் வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்வதுதான் நம்முடைய நோக்கமாகும். திருநங்கைகள் சுயசார்புடன் தொழில் செய்திட மானியத்துடன்கூடிய கடன் உதவிகள், வீடுகள், அவர்களுக்கான இலவச கல்லூரிக் கல்வி, அவர்கள் ஊர் காவல் படையில் பணி புரியும் வாய்ப்பு, அவர்களுக்கு திருநங்கைகள் என பெயர் சூட்டியது மட்டுமின்றி, அவர்களுடைய தன்மான வாழ்க்கைக்கு வழிசெய்து காப்பதுதான் நம்முடைய ஆட்சி.*

*முதுமையின் துயர் துடைக்க மூத்த குடிமக்களை பேணிப் பாதுகாப்பதற்கு அன்புச் சோலைகள்; அவர்களின் இல்லத்திற்கு நேரடியாக உணவுப் பொருட்களை வழங்கும் தாயுமானவர் திட்டம்; மாற்றுத்திறனாளிகளுக்குப் பல்வேறு புதிய திட்டங்களுக்கு அதிக நிதி ஒதுக்கீடு; புற உலகச் சிந்தனையற்ற மதி இறுக்கம் கொண்டவர்களுக்கு உயர் சிகிச்சை மையம்; தொல் பழங்குடி மக்கள் வாழ்வு மேம்பட்டு, தொழில்வளம் பெருக அவர்களுக்குப் பயன்தரக்கூடிய புதிய திட்டங்கள் என, இந்த ஆட்சி கடைக்கோடி மக்களின் நலன் காக்கும் ஆட்சியாக அமைந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)*

## கல்விக்கு வழங்க வேண்டிய நிதி, ஜல்ஜீவன் திட்டம், இயற்கை பேரிடர் நிதி போன்றவற்றை வழங்க ஒன்றிய அரசு மறுக்கிறது!

### மக்கள் நல அரசு!

*அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலம், முற்போக்கான பல மக்கள் நலத் திட்டங்களையும், சட்டங்களையும் அறிமுகப்படுத்துவதற்கு பெயர் பெற்றது. அதேபோல, இந்தியத் திருநாட்டில் மாபெரும் சமூக நலத் திட்டங்கள், சீர்திருத்தங்கள் அனைத்தையும் அறிமுகப்படுத்தியது நம்முடைய தாய்த் தமிழ்நாட்டில்தான். நூறு ஆண்டுகளுக்கு முன்பே, நாட்டிலேயே முதன் முறையாக, நீதிக்கட்சியால் சென்னை ஆயிரம்விளக்கு பள்ளியில் மதிய உணவுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அதற்குப் பிறகு, நாட்டிலேயே முதன் முதலாக பள்ளிக் குழந்தைகளுக்கான காலை உணவுத் திட்டம் நம்முடைய முதலமைச்சர் அவர்களால்தான் அறிமுகப்படுத்தப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)*

*தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்ட மதிய உணவுத் திட்டம், சத்துணவுத் திட்டம், முதலமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட காலை உணவுத் திட்டம் உள்ளிட்ட திட்டங்களைப் பின்பற்றி, பிற மாநிலங்களும் இத்திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் இறங்கியுள்ளன.*

*பதவியேற்ற முதல் நாளே கையெழுத்திட்ட, மகளிருக்கான விடியல் பயணத் திட்டத்தை இன்று மற்ற மாநிலங்களும் பின்பற்றத் தொடங்கி இருக்கின்றன. ஒரு கோடியே 31 இலட்சம் பெண்கள் பயன்பெறும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் இன்று நாட்டின் பல மாநிலங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) மாவட்டந்தோறும் ஏற்படுத்தப்பட்டிருக்கும் தோழி விடுதிகள், இன்று நாடெங்கும் விரிவுபடுத்தப்படும் என ஒன்றிய அரசு அறிவித்துள்ளது. நமது அரசு சென்ற வருடம் அறிமுகப்படுத்திய அரசு அலுவலர்களின் பணியிடை நிகழும் மரணத்திற்கு ஒரு கோடி ரூபாய் வங்கிகளின்மூலம் காப்பீடு வழங்கும் திட்டம் தற்போது ஒன்றிய அரசின் பணியாளர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டு இருக்கிறது. எனவே இந்த ஆட்சி, “நாட்டிற்கே நல்வழி காட்டும் நல்லாட்சி”.*

### அறிவாயுதம்!

*அரசு மாதிரிப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் இந்திய தொழில்நுட்பக் கழகத்திலும் (IIT), உலகின் புகழ்பெற்ற நிறுவனங்களிலும், பல்வேறு புகழ்பெற்ற பல்கலைக் கழகங்களிலும் சேர்ந்து, கல்வி பயின்றுவருவது நமக்கெல்லாம் பெருமையாகும். நான் முதல்வன் திட்டத்தில் திறன் பயிற்சி பெற்றவர்கள், தொழில்நுட்ப உலகத்தின் முன்னணி நிறுவனங்களில் இன்று காலடி எடுத்து வைத்திருக்கிறார்கள். மாவட்டந்தோறும் நடைபெற்றுவரும் புத்தகக் காட்சிகள், வாசிப்பு இயக்கத்தை இன்று பரவலாக்கி இருக்கிறது. பன்னாட்டு புத்தகக் காட்சி, பல்வேறு உலக மொழிகளில் தமிழ் இலக்கியங்களை இடம்பெற வைத்திடும் ஒரு மகத்தான முயற்சியாக மலர்ந்திருக்கிறது. உயர்கல்வி சேர்க்கை சதவிகிதம் தேசிய சராசரியைவிட இரண்டு மடங்கு அதிகரித்துள்ளது. மதுரை, கோவை, திருச்சி, சேலம், கடலூர், நெல்லையில் என தமிழ்நாட்டில் பரவலாக மாபெரும் நூலகங்கள், முதல்வர் படிப்பகங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆட்சியின் முதன்மை நோக்கமாக “உங்கள் கரங்களில் அறிவாயுதம், ஊரெங்கும் அறிவாலயம்” என்ற முழக்கம் அமைந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)*

*நிகழ்காலப் போக்குகளை சீரமைப்பதில் காட்டிடும் கவனத்தையும், ஆர்வத்தையும், எதிர்கால வளர்ச்சியிலும் நமது அரசு காட்டி வருகிறது. அரசு அலுவலகங்களும் கணினிமயமாகி வருகின்றன. அரசு சேவைகள் இணையவழியில் துரிதமாக மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. ஏன்? இன்று சட்டமன்றத்தில்கூட காகிதப் புழக்கம் குறைந்து கையடக்கக் கணினியில் நிதிநிலை அறிக்கை உட்பட சட்டமன்றப் பதிவேடுகள் காணக்கிடைப்பது நம்முடைய நாட்டிலேயே முதன் முறை அல்லவா? வருங்காலங்களில், மனித வளத்தைப் பயன்படுத்துவதில் மிகப்பெரிய மாற்றத்தை உண்டாக்கப்போகும் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தும் AI Mission அறிமுகப்படுத்தப்பட்டு இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)*

*நடைபெற்றுவரும் தொழில் புரட்சியில் மிகப்பெரிய பங்கு வகிக்கக்கூடிய Semiconductor Mission-2030 ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அரசுப் பொறியியல் கல்லூரிகள் மற்றும் தொழில் பயிற்சி நிறுவனங்களில் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி Industry 4.0 தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது. நவீன தமிழ்நாட்டின் சிற்பி முத்தமிழறிஞர் கலைஞர், எப்படி, துண்டுப் பிரசுரம் முதல் ட்விட்டர் காலம் வரை தன்னைத் தகவமைத்துக்கொண்டாரோ! அதேபோல், தமிழ்நாட்டில், மனித வளத்தையும் நவீன தொழில் நுட்பப் பாதையில் கொண்டு செல்ல இந்த ஆட்சி அடித்தளம் அமைத்திருக்கிறது. கடந்த 2000 ஆம் ஆண்டு உலகமே புத்தாயிரமாவது ஆண்டுக் கொண்டாட்டத்தில் களித்துக் கொண்டிருந்தபோது, ஜனவரி முதல் தேதியன்று, வான்புகழ் வள்ளுவருக்கு முக்கடல் சங்கமிக்கும் குமரி முனையில் (மேசையைத் தட்டும் ஒலி) சிலை எடுத்தவர் நம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அது மட்டுமின்றி, அதே ஆண்டு, சென்னையில், தரமணியில் டைடல் தொழில்நுட்பப் பூங்காவையும் அவர் திறந்து வைத்தார். (மேசையைத் தட்டும் ஒலி) தொன்மையும், தொடர்ச்சியும் தமிழகத்தின் பெருமை என்று சுட்டிக்காட்டிய கலைஞர் வழியில், “ததும்பி வழியும் தமிழ்ப் பெருமிதம் ஒரு புறம், உலகையே வெல்லும் தொழில்நுட்பம் மறுபுறம்” (மேசையைத் தட்டும் ஒலி) என்ற உயர்நோக்கோடு வீறுநடை போடுகிறது இந்த அரசு.*

### காலநிலை மாற்றம் குறித்து அதீத கவனம் செலுத்தும் அரசு!

*இந்த அரசினுடைய முக்கியமான நோக்கங்களில் காலநிலை மாற்றமும் ஒன்றாகவே இருந்து வந்திருக்கிறது. தொழில்நுட்பம்*

## மற்ற மாநிலங்களுடன் போட்டி என்பதைவிட வளர்ந்த நாடுகளுக்கு இடையே போட்டி என்பதுதான் நமது இலக்கு!

தொடர்ச்சி 13 ஆம் பக்கம்